# வள்ளலாரின் தமிழ்ப் பணி

**முனைவர் சு.கிருஷ்ணவேணி**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,**

**இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்.**

42

**ஆய்வு சுருக்கம்**:

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய அருட்பிரகாச வள்ளலாரின் பிறப்பு -சமயப் பணி குறித்தும், சமயம் கடந்த நிலையில் அவரது சீர்திருத்த பணி குறித்தும், அவரது ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம் - திருவருட்பா – மருத்துவ குறிப்பு நூல்கள் போன்ற இலக்கியப் பணி குறித்தும் விளக்கும் வகையில் இக்கட்டுரையானது அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**:

சமயம் விளக்கம் - வள்ளலாரின் சமயப் பணி - வள்ளலாரின் சமய சீர்திருத்தம் - இலக்கியப் பணி.

**முன்னுரை:**

தமிழால் சமயம் வளர்ந்ததும்
சமயத்தால் தமிழ் வளர்ந்ததும்

காலம் நமக்கு காட்டும் பேருண்மை. காரைக்கால் அம்மையார் காலம் தொடங்கி இன்றைய காலம் வரை ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க இயலாத பேராற்றலாய் கட்டுண்டு கிடக்கின்றன. தமிழ் மொழியை பக்தியின் மொழியாக உலகுக்கு அடையாளம் காட்டக் கூடிய வகையில் அமைவது அம்மொழியில் அமைந்துள்ள பக்தி பனுவல்கள் எனலாம். காலந்தோறும் பக்தி பாடல்கள் இயற்றிய சான்றோர்களை தமிழ் இலக்கியம் நமக்குக் காட்சிப் படுத்துகின்றது. அவ்வகையில் 19ஆம் நூற்றாண்டில் சமயத்தின் வழியாக தமிழ் வளர்த்த சான்றோராம் வள்ளலாரின் தமிழ்ப் பணியையும், சமய சீர்திருத்த பணியையும் விளக்குவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

**சமயம்**:

தனக்கு அப்பாற்பட்ட ஆற்றலுக்கு உருவமும் பெயரும் கொடுத்து மக்களை நல்வழிப்படுத்தும் இயக்கம் சமயம் என்று குறிக்கப்படுகின்றது. சமயம் அல்லது மதம் என்பது கடவுள் நம்பிக்கை அடிப்படையிலான கோட்பாட்டு அமைப்புகளில் ஒன்று என்று விளக்கம் அளிக்கப்படுகின்றது. சமயம் ஒரு தத்துவம் ஒரு மத கோட்பாடு ஒரு வாழ்வியல் நெறி எனவும் குறிப்பர். இச்சமயம் பற்றி காந்தியடிகள் ‘சமயம் இல்லாமல் மனிதன் உயிர் வாழ முடியாது’ என்று கூறுகின்றார். சமயம் மானுட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றது. சமம் + இயம் = சமயம் எல்லோரும் சமம் என்ற எண்ணத்தோடு ஒத்தும் உதவியும் வாழ வேண்டும் என்று சமயம் என்பதற்கு பொருள் கூறப்படுகின்றது இவ்வகையில் உலகமெல்லாம் ஒரே சமயம் என்ற நிலையில் இருந்து மாறி பல்வேறு சமயங்கள் கிளை விட்டு வளர்ந்துள்ளன. அவ்வகையில் இந்தியாவில் காணப்படும் சமயங்களை இந்து சமயம், இஸ்லாம் சமயம், கிறித்தவ சமயம், சமண சமயம், பௌத்த சமயம் என வகைப்படுத்தலாம். அவற்றுள் இந்து

சமயம் என்பது சைவம், சாத்தம், வைணவம், சௌரம், கணபதியம், கௌமாரம் என்று ஆறு வகை உட்பிரிவுகளாக பகுக்கப்பட்டுள்ளன.

**சைவ சமயம்**: அருவமான இறைநிலையே அனைத்து தோற்றங்களின் உட்பொருளாக உள்ளது என்ற கருத்தில் எல்லோரிடத்தும் அன்பும் கருணையும் காட்டி யாருக்கும் துன்பம் செய்யாது வாழும் நெறி சைவ சமயம் என பகுக்கப்பட்டது. சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டு வணங்கக்கூடிய சமயம் சைவ சமயம்.

**சாத்த சமயம்**: இந்த உலக இயக்கத்திற்கு அடிப்படை காரணம் சக்தி. உடல் உயிர் பார்க்கும் பொருள் எல்லாம் சக்தி மயம், சக்தியே அணு முதல் அண்டங்கள், உயிர்கள், உடல்கள் அனைத்துமாய் உள்ளதால் சக்தியை கடவுளாகக் கொண்டு இறைவழிபாடு செய்யும் சமயம் சாத்த சமயம்.

**வைணவம் சமயம்**: மகாவிஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணவ சமயம்.

**சௌர சமயம்**: உலக இயக்கத்திற்கு மூல காரணம் சூரியன் அத்தகைய சூரியனை கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சௌர சமயம்.

**காணபத்தியம் சமயம்**: யானை முகனாகிய கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வணங்கக்கூடிய சமயம் கணபத்திய சமயம்.

**கௌமார சமயம்**: ஆறுமுகனாகிய குமர கடவுளை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வணங்கும் சமயம் கௌமார சமயம்.

**இஸ்லாம் சமயம்**: இஸ்லாம் என்பது அரபுச் சொல் இதன் பொருள் பணிதல் அமைதி முகமது நபி அவர்களை தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொண்டு அவரது கட்டளை பற்றி செயல்படும் சமயம் இஸ்லாம் சமயம்.

**கிறித்தவ சமயம்**: உலகெல்லாம் பரவி இருக்கும் சமயமாக விளங்குவது கிறிஸ்தவம். இச் சமயத்தை தோற்றுவித்தவர் இயேசு கிறிஸ்து.

**பௌத்த சமயம்:** கிமு 566 முதல் கிமு 486 வரை வாழ்ந்த புத்தரது போதனைகளை அடிப்படை தத்துவமாக கொண்டு செயல்படும் சமயம் பௌத்த சமயம். இங்கனம் இந்து இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம், சமணம் போன்ற சமயங்கள் இந்தியாவில் வளர்ச்சி பெற்று வேரூன்றி நிலைத்தன. இவற்றுள் சைவசமயமும், வைணவ சமயமும் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கின. சைவ சமய வளர்ச்சிக்கு பாடுபட்ட சான்றோர்களில் ஒருவர் வள்ளலார்.

**வள்ளலாரின் சமய பணி:** ஆழ்ந்த இருளினிடை விண்ணில் ஒரு வெள்ளி முளைத்து ஒளியின் வரவை தெரிவிப்பது போல் நாட்டில் சாதி மதப்போரும் பூசலும் அமைதி இன்மையுமாகிய இருள் சூழ்ந்த போது யாதேனும் ஒரு மூலையில் அருளாளர்கள் தோன்றி இருள் தலைகளை களைவது இயல்பு. அவ்வகையில் 19ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய சமூகத்தில் - சமயத்தின் நிலவியிருந்த சாதி மத பூசல்களையும் மாந்தநேயம் மட்டுமின்றி உயிர் குலம் அனைத்திற்கும் அன்பு காட்டும் ஆண்ம நேய ஒருமைப்பாட்டை காணவும் தோன்றிய விடிவெள்ளி ராமலிங்க அடிகளார் ஆவார். இவரது

பிறப்பினைப் பற்றி

"துருக்கர் கிறித்தவர் சூழ்இந் துக்களேன்
றிருப்பவர் தமிழரே என்பது உணராது
சச்சரவு பட்ட தண்டமிழ் நாடு
மெச்சவும் காட்டுவோன் வேண்டுமென்றெண்ணி
இராமலிங்கனை ஈன்றதன்றோ?" (பாரதிதாசன் கவிதைகள் ப -176)

என்று மதமாறும் தமிழர்களை இணைப்பதற்கு தோன்றிய விடிவெள்ளி இராமலிங்க அடிகளார் என்று கூறுகிறார் பாரதிதாசன்.

**பிறப்பு**: கிபி 19ஆம் நூற்றாண்டினை இந்திய வரலாற்றில் சிறந்த காலகட்டமாக குறிப்பிடுவர், ஏனெனில் இந்நூற்றண்டில்தான் வரலாற்றில் - மனித வாழ்க்கை முறையில்- சமயத்தில் - சமூகத்தில் – சிந்தனையில் - கலை பண்பாடுகளில் - கல்வியில் பல்வகை மாற்றங்கள்,முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இச்சூழலில் தமிழகத்தின் தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரத்திற்கும் வடலூருக்கும் இடையே உள்ள மருதூர் எனும் ஊரில் 1823 ஆம் ஆண்டு ராமையா பிள்ளை சின்னம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் ராமலிங்க வள்ளலார்.

ஒன்பது வயது வரை பள்ளி செல்ல விரும்பாது கந்தகோட்டத்து முருகனைத் துதித்து பல பாடல்களைப் பாடினார். பத்து வயதிலேயே இலக்கண தரம் வாய்ந்த பாடல்கள் புணையும் ஆற்றல் பெற்றிருந்தார். இவரது சிவநேச வெண்பா என்ற நூறு வெண்பாக்களை உள்ளடக்கிய அருட்பாக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. தமிழில் வெண்பா எழுதுதல் இலக்கண புலமை உடையவர்களுக்கு மட்டுமே கை வரப்பெறும். தமிழில் உள்ள அனைத்து பாவகைகளிலும் பாடல் இயற்றும் ஆற்றல் பெற்றவராய் விளங்கினார். இவர் எளிமையும், இனிமையும், இசை நயமும் ததும்பும் தோத்திரப் பாடல்களைப் பாடிய கவிஞர் மட்டுமல்லர், கண்ணியையும், தெம்மாங்கு, கும்மியையும் பாடித் தமிழுக்கு வளங்கூட்டிய புலவறும் ஆவார்.

**சமயச் சொற்பொழிவு**: பள்ளி செல்ல நாட்டமின்றி இறை ஆற்றலால் பல பாடல்களைப் பாடி வந்த வள்ளலார் ஒருமுறை தன் அண்ணன் சபாபதி ஒப்புக்கொண்டிருந்த புராண சொற்பொழிவினை உடல் நலக்குறைவால் ஆற்ற இயலாத சூழலில் சோமு செட்டியார் வீட்டிற்கு வள்ளலார் அவர்கள் சென்று பெரிய புராண சொற்பொழிவினை ஆற்றினர். அன்று சொற்பொழிவு கேட்க வந்திருந்த அனைவரும் தன்னிலை மறந்து இறை ஆற்றலை பெற்றவராய் விளங்கினர். அன்று முதல் சோமு செட்டியார் வள்ளலாரையே சொற்பொழிவாற்ற அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். இவ்வகையில் பல ஆன்மீக சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார் வள்ளலார். அவரது ஆன்மீக ஞானம் வளர வளர வித்துவான் ராமலிங்கம் பிள்ளை என மாறி, பின் இராமலிங்க சுவாமிகள் என அழைக்கப்பட்டு பிறகு வள்ளலார் ஆனார். இவரது ஈடு இணையற்ற உயிர் இறக்கத்தாலும் மனிதர்களுக்கு இடையேயான சமத்துவ நோக்கத்தாலும் அருட்பிரகாச வள்ளலார் ஆகி நிறைவாய் அருள் ஞான ஒளியைப் பெற்றதன் அடையாளமாய் திருவருட்பிரகாச வள்ளலார் என போற்றப்பட்டார். தொடக்க நிலையில் முருக

வழிபாடு, பிறகு சிவலிங்க வழிபாடு, அடுத்து நடராசர் வழிபாடு என மாறி இறுதியில் சமய சமரசத்தை உள்ளடக்கிய ஒளி வழிபாட்டை வலியுறுத்தினார்.

**வள்ளலாரின் சமய சீர்திருத்த பணி**:

"அகத்தே கருத்து புறத்து வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுதற்கென்றே எனையிந்த
யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்" ( திருவருட்பா 5485)

என்று வள்ளலார் கூறுவதில் இருந்து வெறும் இறைப்பணியாளராக இறைவர்கள் திருஉள்ளத்தை உணர்ந்து அதை மக்களுக்கு உபதேசித்த ஞானியாக மட்டும் விளங்காமல் அவர் ஒரு சமய சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார் என்பதை அறிய முடிகின்றது. வள்ளலார் சமுதாய நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் ஆன்மீக துறையின் உச்சியடைய தனித்து இருந்த போதிலும் மனித குலத்தின் நன்மையை மனதில் கொண்டு அவர் செய்த பொதுநல தொண்டுகள் பலவாகும். அவர்தன் எண்ணமும் செயலும் மக்களின் நலன் ஒன்றே குறிக்கோளாக அமைந்து இருந்தது. தான் வாழ்ந்த காலச் சூழ்நிலையில் சமூகத்தில் புரையோடிப் போயிருந்த சாதி மதப்பூசல்களையும், அரசியல் பொருளாதார சீர்கேடுகளையும் நீக்கி புத்துலகம் காண விளைந்தார். அனைத்து சமயமும்ம் ஒன்று என்ற நோக்கில் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவியவர் வள்ளலார். உடலுக்கு உயிர் ஒன்று என்பது போல உலகுக்கு இறைவன் ஒருவனே என்பது சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நோக்கமாக இருந்தது.

தெய்வங்கள் பல பல சிந்தனை செய்வாரும்
சேர்கதி பல பல செப்புகின்றாரும்
பொய் வந்த கலை பல புகன்றிடு வாரும்
பொய்ச்சமையாதியை மெச்சுகின்றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம் ஒன்று இல்லார்" ( திருவருட்பா 4726)

என்று கூறுகிறார் வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் முதன்மையான நோக்கம் ஆண்மணியே ஒருமைப்பாடு ஆகும் இது ஒருமைப்பாட்டை காண்பதற்கு சாதி மத வேறுபாடுகள் தடைக்கல்லாய் இருப்பதால் அவற்றை சாடுகிறார் வள்ளலார்

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திர சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகிர்
அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே" ( திருவருட்பா 5566)

என்று மக்களுக்கு அறிவுரை வழங்குகின்றார் வள்ளலார். இங்கனம் சமூகத்தில் புரையோடி

போயிருந்த சாதி மத பாகுபாடுகளை நீக்க முயல்கின்றார்.

**வள்ளலாரின் இலக்கியப் பணி**:

வள்ளலார் இறைவன் மீது பாடிய பாடல்கள் தொகுக்கப்பட்டு திருவருட்பா என்ற பெயரில் வழங்குகின்றன. இவை ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன, இவை தவிர திருமுறைகளில் சேராத சில பாடல்கள் தனிப் பாடல்களாக அமைந்துள்ளன. இவை மட்டுமின்றி திருவருட்பா உரைநடை பகுதி என்பதும் அடங்கும்.

**உரைநடை இலக்கியம்**: வள்ளலார் இறைவனிடம் முன்வைக்கும் விண்ணப்பங்கள் அனைத்தும் உரைநடையில் அமைந்துள்ளன, மேலும் தன் நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்த கடிதங்களும், கட்டளைகளும் உரைநடை இலக்கியத்திலேயே அமைந்துள்ளன. இவை தவிர மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பதையும், திருவருள் மெய்மொழி, அருள்நெறி பேர் உபதேசம், நித்திய கரும விதி, உபதேச குறிப்புகள் என்பவையும் இவரது உரைநடை இலக்கியங்கள் ஆகும். இவை தவிர

- தமிழ் என்ற சொல்லுக்கு வரைந்த உரை
- பெரியபுராணம் முதற்பாகம் முதல் செய்யுள் - உலகலாம் என்பதற்கு வரைந்த விளக்க உரை
- ஒழிவில் ஒடுக்க பாயிர விருத்தி
- தொண்டை மண்டல சதகத்தின் நூற்பெயர் இலக்கணமும், கடவுள் வாழ்த்து பாடலுக்கு செய்த உரையும்
- பொன் வண்ணத்து அந்தாதியின் 22 ஆம் பாடலுக்கு செய்த உரை
- வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த உரை

போன்றவையும் மருத்துவ குறிப்பு நூல்களையும் உரைநடையில் இயற்றியுள்ளார். **பதிப்பித்த நூல்கள்**: ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார் இங்கனம் உரைநடை இலக்கியம் இறை உணர்வு பாடல்கள் மற்றும் பதிப்பு துறை என அனைத்திலும் கால் பதித்தவர் வள்ளலார்.

**முடிவுரை**

உலக உயிர்கள் அனைத்தும் இன்புற்று இருக்க வேண்டும் என்ற அருள் உள்ளம் கொண்டவர், இறை அனுபவம் பெற்று அதன் பயனாய் பல பாடல்களை இயற்றியவர், இறுதியில் இறைவன் ஒருவனே என்பதை கண்டு தெளிந்தவர், சன்மார்க்க நெறியை உலகுக்கு வழங்கியவர் வள்ளலார். இவர் ஆன்மிக விடிவெள்ளி, கருணையே வடிவாகக் கொண்ட ஜீவகாருண்ய சீலர், தமிழ் வளர்த்த மாபெரும் புலவர், சமுதாய சீர்திருத்தச் செம்மல். இவரது தமிழ்ப் பணியும், சமய சமுதாய சீர்திருத்தப் பணியும் என்றென்றும் போற்றுதலுக்கு உரியவை.

**பார்வை நூல்கள்**

1.வள்ளலார் திருவருட்பா

2.தமிழ் இலக்கிய வரலாறு சு ஆனந்தன்.